உ



மூளாய் வதிரன்புலோ

# சித்திவிநாயகப் பெருமான்

# வரலாற்றுச் சிறப்புப் பாடல்கள்

## 2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



வதிரன் புலோவானை வானோர் தலைவனை
உதிரம் சொரிந்தெங்கள் உருநிலத்தெழுந்தோனை
முதிர்ஞானப் பக்தி கொண்டு முன்வந்து தொழுவோற்கு
எதிலுமே வெற்றிவரும் எடுத்ததெல்லாம் சித்தி தரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைப்பதற்கு உதவுகின்ற பாசக் கரம் ஒன்று
பாரிலெம்மைக் காத்தருளும் நேசக் கரம் ஒன்று
துடைத்து ஆசை அழிப்பதற்கு கிடைத்த கரம் ஒன்று
தூயவற்கு அருள்வதற்காய் ஆன கரம் ஒன்று
அடைத்துப் பிறப்பை மறைப்பதற்கு நீண்ட கரம் ஒன்று
ஆனைமுகன் கணபதிக்கு ஐந்து கரம் உண்டு
கிடைத்த கரம் ஐந்தின் பொருள் நீயருளல் வேண்டும்
கீர்த்தியுறு வதிரன்புலோ அமர்ந்த பிள்ளையாரே! -1

புவியதனைக் குளிரவைக்க உயர்ந்தகரம் ஒன்று
பூண்டினொடு புள் முளைக்க வைத்த கரம் ஒன்று
தவித்துவரும் உயிரினத்தைத்தாங்கும் கரம் ஒன்று
தாயினொடு தந்தையாரை வணங்கும் கரம் ஒன்று
கவிவடிக்கத் கொம்புடைத்து எழுதும் கரம் ஒன்று
காருண்யன் கணபதிக்கு ஐந்துகரம் உண்டு
குவிந்த கரம் ஐந்தின் பொருள் நீயருளல் வேண்டும்
கூட்டுபுகழ் வதிரன்புலோ அமர்ந்த பிள்ளையாரே! -2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதுவோற்கு எழுத்தெடுத்து கொடுக்கும் கரம் ஒன்று
ஏற்பவற்கு ஏற்ற வழி காட்டும் கரம் ஒன்று
தொழுபவரின் தொழுகரத்தை காக்கும் கரம் ஒன்று
தோப்புக்கரணம் போடுவோரைத் தூக்கும் கரம் ஒன்று
அழுதழுது தொழுபவற்காய் அருளும் கரம் ஒன்று
ஆதிமூலன் கணபதிக்கு ஐந்து கரம் உண்டு
விழுதுகரம் ஐந்தின் பொருள் நீயருளல் வேண்டும்
வீசுமெழில் வதிரன்புலோ அமர்ந்த பிள்ளையாரே! -3

அறுகம்புல் அர்ச்சனையை ஏற்கும் கரம் ஒன்று
ஆறுதனைப் பெருகியோட வைத்த கரம் ஒன்று
இறுக்கமாகப்..பற்றுவோரை ஈர்க்கும் கரம் ஒ[illegible]
ஈஸ்வரனின் கட்டளையை முடிக்கும் கரம் ஒன்று
சிறுபிடியை பெருவடிவாய் மாற்றும் கரம் ஒன்று
சீரழகன் கணபதிக்கு ஐந்து கரம் உண்டு
உறுதி கரம் ஐந்தின் பொருள் நீயருளல் வேண்டும்
ஊர்முதலாம் வதிரன்புலோ அமர்ந்த பிள்ளையாரே! -4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலமகளாய் நின்று எமைத்தாங்கும் கரம் ஒன்று
நீரலையாய் நின்று எமைக் காக்கும் கரம் ஒன்று
மலங்களினைத் தீயாக்கிசுட்ட கரம் ஒன்று
மாசில்லாத காற்றாகிவீசு கரம் ஒன்று
உலகதனை வான்வழியில் சுழற்று கரம் ஒன்று
ஊரழந்தோன் கணபதிக்கு ஐந்து கரம் உண்டு
நலகரங்கள் ஐந்தின் பொருள் நீயருளல் வேண்டும்
நானிலத்தூர் வதிரன்புலோ அமர்ந்த பிள்ளையாரே! -5

தம்பிகந்தன் கவலை தீர்க்கப் போன கரம் ஒன்று
தாவியோடும் யானையாகி நீண்ட கரம் ஒன்று
நம்பிவரும் அடியவரை நகர்த்தும் கரம் ஒன்று
நாழுமிந்த உலகந்தனை ஆழும் கரம் ஒன்று
கும்பிடுவோர்க்கருள் சுரந்து நிறைக்கும் கரம் ஒன்று
கூர்முகனாம் கணபதிக்கு ஐந்து கரம் உண்டு
செம்மைகரம் ஐந்தின் பொருள் நீயருளல் வேண்டும்
சேவடிசேர் வதிரன்புலோ அமர்ந்த பிள்ளையாரே! -6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றிதரச் சுற்றிவந்து பற்றும் கரம் ஒன்று
வேண்டுவோற்கு வேண்டுவன ஈயும் கரம் ஒன்று
சுற்றிவரும் பகைநடுங்க வைத்த கரம் ஒன்று
சூளுரைத்த அசுரர்களை அழித்த கரம் ஒன்று
நற்றமிழாம் முத்தமிழை நல்கும் கரம் ஒன்று
நாதனெங்கள் கணபதிக்கு ஐந்து கரம் உண்டு
பொற்கரங்கள் ஐந்தின் பொருள் நீயருளல் வேண்டும்
போற்றுமுயர் வதிரன்புலோ அமர்ந்த பிள்ளையாரே! -7

எடுத்ததெல்லாம் அடுத்துவந்து முடிக்கும் கரம் ஒன்று
ஏற்றமுறவாழ்வளித்து வளர்க்கும் கரம் ஒன்று
கொடுத்த அவல் மோதகங்கள் எடுக்கும் கரம் ஒன்று
கோபமுற்ற வேலன்கை கோர்த்த கரம் ஒன்று
இடுக்கணென்று எடுத்துரைத்தால் துடைக்கும் கரம் ஒன்று
ஈசன்மகன் கணபதிக்கு ஐந்து கரம் உண்டு
தொடுத்தகரம் ஐந்தின் பொருள் நீயருளல் வேண்டும்
தோற்றமுற்று வதிரன்புலோ அமர்ந்த பிள்ளையாரே! -8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தியோடு புத்தியையும் அருளுங்கரம் ஒன்று
சீர்சிறப்பு பேர்புகழை வழங்கும் கரம் ஒன்று
நித்தமும்நாம் நினைவினொடு துதிக்கும் கரம் ஒன்று
நீண்டவினை நீண்டிடாமல் தடுக்கும் கரம் ஒன்று
உத்தமத்தை உலகமெலாம் விதைக்கும் கரம் ஒன்று
ஊற்குயிராம் கணபதிக்கு ஐந்து கரம் உண்டு
பக்திக்கரம் ஐந்தின் பொருள் நீயருளல் வேண்டும்
பாரிலுயர் வதிரன்புலோ அமர்ந்த பிள்ளையாரே! -9

முத்தமிழை வித்தகத்தை வழங்கும் கரம் ஒன்று
மூசுறுமேல் ஏறிவிளை யாடுங் கரம் ஒன்று
புத்தகத்தை உட்பொருளை உணர்த்தும் கரம் ஒன்று
பூபாரம்தனைத்தாங்கி காக்கும் கரம் ஒன்று
பத்திரத்தை புத்திரத்தை அருளும் கரம் ஒன்று
பாலமகன் கணபதிக்கு ஐந்து கரம் உண்டு
தத்துகரம் ஐந்தின் பொருள் நீயருளல் வேண்டும்
தாழாத வதிரன்புலோ அமர்ந்த பிள்ளையாரே! -10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சலங்கள் நீக்குகின்ற சாமி கரம் ஒன்று
சாணிதனை ஏணியாக்கி ஏறு கரம் ஒன்று
அஞ்சுதலை நீக்குகின்ற அபயக் கரம் ஒன்று
ஆறுதலை அளிக்கின்ற அன்புக் கரம் ஒன்று
வெஞ்சமரில் வேண்டாரை அழித்த கரம் ஒன்று
வேளமுகன் கணபதிக்கு ஐந்து கரம் உண்டு
விஞ்சுகரம் ஐந்தின் பொருள் நீயருளல் வேண்டும்
வீரனுறை வதிரன்புலோ அமர்ந்த பிள்ளையாரே! -11

அடக்கம்தனை அறிவுறுத்தும் அரிய கரம் ஒன்று
ஆறாத பாசம்தனைபுகட்டும் கரம் ஒன்று
இடர்நீக்கி இனிய வாழ்வை ஈயும் கரம் ஒன்று
ஈருலகும் அபயம்தர இருக்கும் கரம் ஒன்று
உடலினோடு உள்ளமதைக் காக்கும் கரம் ஒன்று
ஊழகற்றும் கணபதிக்கு ஐந்து கரம் உண்டு
எடுத்தகரம் ஐந்தின் பொருள் நீயருளல் வேண்டும்
ஏற்றமுறு வதிரன்புலோ அமர்ந்த பிள்ளையாரே! -12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெள்ளுதமிழ் தனையள்ளித் தந்த கரம் ஒன்று
தேரேறித் தீவினைகள் களைந்த கரம் ஒன்று
உள்ளத்துள் உயர்கரமாய் எழுந்தரம் ஒன்று
ஊர்ந்துவரும் தேரேறிப் பரந்த கரம் ஒன்று
பிள்ளையாற்கு பெருமைதரும் தும்பிக் கரம் ஒன்று
பீதிபோக்க கணபதிக்கு ஐந்து கரம் உண்டு
துள்ளுகரம் ஐந்தின் பொருள் நீயருளல் வேண்டும்
தூயமூளாய் வதிரன்புலோ அமர்ந்த பிள்ளையாரே! -13

## வாழ்த்து

வாழி நம் மூளாயூர் மூத்தோன் வாழி
வள்ளியொடு தெய்வானை வேலோன் வாழி
நண்ணியிறை பூசை செய்யும் அந்தணர்கள் வாழி
நறுஞ்சைவ நெறி வளர்க்கும் பெரியோர் வாழி
எண்ணிறைந்த பாட்டிசைக்கும் புலவோர் வாழி
ஏற்புடனே கேட்டருளும் அன்பர் வாழி
வாழிநம் வதிரன்புலோத் தலமூர் வாழி
வளர்சமய நெறி வாழி! வாழி! வாழி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கம்
ஆசுகவி .செ.சிவசுப்பிரமணியம்

வெளியீடு:
க. பாலச்சந்திரன்
*சித்திவிநாயகர் வர்த்தக நிலையம்*
*பிள்ளையார் கோயிலடி*
மூளாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org